**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.145/2024 நாள் :26.11.2025

வா.சா:–1ஆறுமுகம்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(பிரதிவாதி தரப்பில்):–

எவ்வளவு நாளுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டிருந்தார் என்றால் பணம் கொடுப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு கேட்டிருந்தார். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே கொடுக்கல், வாங்கல் இருந்ததா என்றால் உண்டு. எத்தனை முறை பணபரிவர்த்தனை இருந்தது என்றால் 2, 3 வருடங்களாகவே இருந்தது. 2, 3 வருடங்களில் பிரதிவாதி எத்தனை முறை கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால் பணம் கைமாற்றாக கேட்பார், திருப்பி கொடுத்துவிடுவார். கைமாற்றாக ரூ.10,000/– வாங்குவாரா என்றால் ரூ.10,000/– ரூ.50,000/– வரை வாங்குவார். சொன்ன தேதியில் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவார். எனக்கு ரூ.3,50,000/– கொடுக்கும் அளவிற்கு என்ன வருமானம் உள்ளது என்றால் எனக்கு 3 ½ ஏக்கர் பூமி உள்ளது அதில் வரும் வருமானத்தை வைத்து கொடுத்தேன். 3 ½ ஏக்கர் பூமி புஞ்சை பூமியா என்றால் நஞ்சை பூமியும் உள்ளது, புஞ்சை பூமியும் உள்ளது. அதில் என்ன விவசாயம் செய்வேன் என்றால் கரும்பு, தென்னை உள்ளது. பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும்போது ரூ.3,50,000/– வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் கையில் வைத்திருந்தேன். எப்படி அந்த பணம் வந்தது என்றால் தேங்காய் மற்றும் கரும்பு விற்றேன். தேங்காய் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்றதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. உள்ளூரில்தான் விற்றேன். உள்ளூரில் யாருக்கு விற்றேன் என்றால் நிறைய வியாபாரிகள் வருவார்கள். விற்பனை செய்தேன். ரூ.3,50,000/– பணம் எப்படி வந்தது என்றால் சிறிது சிறிதாக வருமானத்தில் சேர்த்தேன். வரவு, செலவுகளை எழுதி வைக்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. இந்த பிரதிவாதிக்கு கொடுத்தது போல் வேறு யாருக்காவது கடன் கொடுத்து வசூல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி போட்ட எதிர்வாதத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிர் வாதத்தில் bank account, incometax return தாக்கல் செய்துள்ளேனா என்றால் விவசாயம்

என்பதால் தாக்கல் செய்யவில்லை. வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு எத்தனை வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது என்றால் 2,3 வங்கிகளில் உள்ளது. வங்கி கணக்கு புத்தகத்தை ஒப்படைக்க பிரதிவாதி கேட்டிருந்தார் அதை ஒப்படைத்தேனா என்றால் இல்லை. வங்கி கணக்கு புத்தகம் எந்தெந்த வங்கிகளில் உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கொடுமுடி, கனரா வங்கி நடுப்பாளையம், ஈக்குவிடாஸ் வங்கி ஈரோடு கிளை ஆகியவற்றி உள்ளது. மேற்படி வங்கி கணக்கு புத்தகங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க ஆட்சேபணை உள்ளதா என்றால் ஒப்படைக்க ஆட்சேபணை இல்லை. மேற்படி வங்கிகளின் வங்கி கணக்குகளை பார்த்தால் நான் என்ன வரவு, செலவு செய்தேன் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் எந்த வங்கியிலாவது கடன் வாங்கியுள்ளேனா என்றால் நான் வங்கியில் கடன் வாங்கவில்லை. ரூ.3,50,000/– பணம் வந்தததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வீட்டில் இருந்த பணத்தை தான் கொடுத்தேன். பிரதிவாதி பணம் வாங்கும்போது வீட்டில் யார், யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். ரூ.3,50,000/– கைமாத்து கடனாக கொடுத்தேனா, வட்டிக்கு கொடுத்தேனா என்றால் வட்டிக்கு கொடுத்தேன். எவ்வளவு வட்டி என்றால் 12%என வாய்மொழியாக சொன்னார். எனக்கு அசல் மட்டும் போதுமா என்றால் இல்லை வட்டியுடன் வேண்டும். எனக்கு ரூ.3,50,000/– பணத்திற்கு வட்டி வேண்டும் என்று அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாகத்தான் வட்டி பேசப்பட்டது. எனக்கு காசோலையை எப்படி கையாள வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காசோலை எத்தனை நாட்களுக்கு செல்லுபடியாகும் என்றால் 3 மாதங்கள் செல்லுபடியாகும். பிரதிவாதி கொடுத்த காசோலை கணக்கில் செலுத்துமாறு கொடுத்தாரா என்றால் ஆமாம். காசோலையில் குறுக்கு கோடிட்டு கொடுத்தாரா என்றால் ஆமாம். எத்தனை குறுக்கு கோடிட்டு கொடுத்தார் என்றால் காசோலையை பார்த்தால்தான் தெரியும். நான் காசோலையை சரிவர பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். பிரதிவாதி தமிழில் கையொப்பம் செய்தாரா, ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தாரா என்றால் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். காசோலையில் முன்புறமும், பின்புறமும் கையொப்பம் செய்தாரா என்றால்

## Copy of Deposition

காசோலையின் முன்புறம் மட்டும்தான் கையொப்பம் செய்தார். காசோலையை ஆங்கிலத்தில் நிரப்பினாரா, தமிழில் நிரப்பினாரா என்றால் ஆங்கிலத்தில் நிரப்பினார். என் வீட்டில் வைத்து நிரப்பினாரா என்றால் இல்லை வரும்போது காசோலையை நிரப்பிதான் கொண்டு வந்தார். ரூ.3,50,000/— என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். நான் வாய்மொழியாக வட்டி கேட்டதாக கூறியுள்ளேன், ஆவணங்கள் எதுவும் நான் ஏன் கேட்டு பெறவில்லை என்றால் காசோலை மட்டும்தான் வாங்கினேன். கிராமப்புறங்களில் புரோநோட் வாங்கிதான் கடன் கொடுக்கும் வழக்கம் என்றால் காசோலை தான் கொடுத்தார். எனக்கு ரூ.3,50,000/— பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு பண வசதி இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன தேவைக்காக என்னிடம் கடன் வாங்குவதாக கூறினார் என்றால் காடு குத்தகைக்கு ஓட்டுவதற்காகவும்,செலவிற்கும் கேட்டார். வசூலுக்கு போடுவதற்கு முன்பு கொடுத்த கடனை திருப்பி கேட்டேனா என்றால் திருப்பி கேட்டேன். வசூலுக்கு போடுவதற்கு ஒரு வாரம் முன்பே கேட்டேன். அதற்கு அவர் என்ன சொன்னார் என்றால் நான் போட்ட தேதியில் வங்கியில் போதிய பணம் இருப்பதாகவும், காசோலையை வசூலுக்கு செலுத்துமாறும் கூறினார். வழக்கு காசோலையை பிரதிவாதி வீட்டில் இருந்து நானும், என் மனைவியும் எடுத்து வந்து பொய்யாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. மேற்படி சங்கதி சம்பந்தமாக மலையம்பாளையம் காவல்நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் இல்லை. நான் காசோலையை வசூலுக்கு செலுத்தியபிறகு போதிய பணமில்லை என்று காசோலை திருப்பப்பட்ட தகவல் அறிந்து பிரதிவாதி காவல்நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளார். காசோலை பற்றி குற்ற வழக்கு தாக்கல் செய்துவிட்டு, இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதி பதில் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காட்டப்படும் வழக்கு காசோலை வா.த.சா.ஆ.1ல் உள்ள கையொப்பமும், வா.த.சா.ஆ.4 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பமும் வேறு வேறுதான் என்றால் இல்லை. ஒரே மாதிரிதான் உள்ளது. 2021ம் ஆண்டு 2ம் மாதத்திலேயே எனக்கும் பிரதிவாதிக்கும்

## Copy of Deposition

பிரச்சனை ஏற்பட்ட நிலையில் அதற்கு பின்னிட்டு 8வது மாதத்தில் நான் எதிரிக்கு கடன் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் அப்படி அல்ல. சட்டப்படியாக பிரதிவாதிக்கு நான் எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த காலத்திலும் ரூ.3,50,000/- கடன் வாங்கவில்லை என்றாலும், தாவா காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ரூ.20,000/- ற்கு மேல் பண பரிவர்த்தனை செய்தால் ஒரு ஆவணம் மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா கடன் தொகையை திருப்பி செலுத்த வேண்டிய எந்த கடமையும் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல.ரூ.2,00,000/- பணம் கடன் கொடுக்க வேண்டும் என்றால் வங்கி பரிவர்த்தனை மூலம்தான் நான் பணம் கொடுத்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம்இல்லை என்றால் சரியல்ல. தாவா செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.11.26 16:14:28 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |